முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.05.02.2026

O.S No.160/2023

வா.சா.1-கணபதி

2ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் படிக்கவில்லை. எனக்கு எழுதப்படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிராது, நிருபண வாக்குமூலத்தை எனது மகன் எனக்கு படித்து காண்பித்தார். வழக்கானது இடத்தை அளந்து எல்கை பிரிக்க தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு சொத்தின் சர்வே எண். 1பி, 2/14 ஆகும். தற்போது எவ்வளவு வீஸ்தீரணம் கைவசம் உள்ளது என்றால் 2 சென்ட் ஆகும். அந்த சொத்தில் எனது 3 வீடுகள் உள்ளது. அதில் 2 வீட்டின் வாசல்கள் தெற்கு பார்த்து உள்ளது. மற்றொரு வீட்டின் வாசல் கிழக்கு பார்த்து உள்ளது. 3 வீட்டின் வாசல்களும் பாதையை நோக்கி உள்ளதா என்றால் பாதையை எனது வசதிக்காக நான் போட்டுள்ளேன். வாசல்கள் பாதையை பார்த்து உள்ளது.

பாதை 5 அடி அகலத்தில் 3 வீடுகளுக்கு முன்பாக உள்ளது. கிழக்கு பார்த்த வாசலுக்கு முன்பாக நகராட்சியால் தண்ணீர் சின்டெக்ஸ் டேங்க் வைக்கப்பட்டுள்ளதா என்றால் பழைய கிணறை நிரப்பி அதன் மீது வைத்துள்ளார்கள். அந்த சின்டெக்ஸ் டேங்கில் இருந்து பொதுமக்களுக்கு பைப் வழியாக தண்ணீர் செல்கிறது என்றால் சரியல்ல. என்னுடைய தெற்கு பக்க வாசல் வீட்டின் வழியாக குடிநீர் குழாய்கள் மேற்கு பார்த்து பைப் செல்கிறதா என்றால் சரிதான்.

தெற்கு பக்கம் நான் போட்டுள்ள பயன்பாட்டு காலி இடத்தின் வழியாக மின் கம்பங்கள் நிறுவப்பட்டுள்ளது என்றால் சரிதான். மின் கம்பங்கள் நிறுவுவதற்கு நான் தடை செய்தேன். நான் தடை செய்ததற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. மின் கம்பம் சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக நிறுவப்பட்டது. சரியாக தெரியவில்லை. குடிநீர்

குழாய் இணைப்பு எப்போது போடப்பட்டது என்றால் சுமார் 2 வருடதிற்குள்ளாக இருக்கும். அதற்காக தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி விவரத்தை எனது பிராதிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. உண்மையில் குடிநீர் குழாய் இணைப்பு போட்டு 2 வருடங்கள் இருக்கும். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எனது அம்மாவிற்கு சொத்தை எழுதிக்கொடுத்த நபர் பெயர் எனக்கு தெரியாது. எனக்கு வாக்குமூலத்தை படித்து காண்பித்த மகன் பெயர் ராஜமணி ஆவார். அவர் நகராட்சியில் ஒப்பந்த டிரைவராக வேலை பார்க்கிறார். எனது நிருபண வாக்குமூலத்தில் என்ன சொல்லியுள்ளேன் என்றால் எனது அம்மாவிற்கு 5 சென்ட் இடம், அதில் 2 சென்ட் எனது அக்காவிற்கு கொடுத்தது போக மீதம் 3 சென்டை எனக்கு வேண்டும் என்று நான் இந்த வழக்கு தாக்கல் செய்ததாக சொல்லியுள்ளேன்.

நிருபண வாக்குமூலத்தில் பக்கம் 3, கீழிருந்து மேலாக 7 வது வரியில் எனது அம்மா விலைக்கு வாங்கிய காலத்திலிருந்து தெற்கு சிந்தாமணி சொத்து என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரி. வாசாஆ 2 ஆவணம் எனது அம்மாவின் ஆவணம் ஆகும். வாசாஆ 2 ல் தெற்கு பக்க எல்லையாக பாதை என்று மட்டும் சொல்லப்பட்டுள்ளது என்றாலும் சிந்தாமணி சொத்து சொல்லப்படவில்லை என்றால் சரி. எனது நிருபண வாக்குமூலத்தில்சொல்லியிருப்பது போல் தெற்கு பக்கத்தில் சிந்தாமணி சொத்து இல்லை என்றாலும் , வாக்குமூல விவரங்கள் தவறு என்றாலும் சரியல்ல. உண்மையில் தெற்கு பக்க பாதையை மறைத்து இந்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எங்கள் பகுதியில் ரிசர்வே வேலை 1973 ல் முடிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. ரிசர்வே காலத்தில் தெற்கு பக்கம் பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது . அது என்னுடைய சொத்து இல்லை என்றால் சரியல்ல. பாதையே ஸ்தலத்தில் இல்லை. எனது

அம்மா எனக்கு எழுதி வைத்த உயிலில் நாங்களாகேவே தெற்கு பக்கம் பாதை என்று போட்டுள்ளோம் என்றாலும் நான் சொன்ன சிந்தாமணி சொத்தை காண்பிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

சொத்திற்கு தெற்கு பக்கம் சிறிது காலி இடத்தை எனது பயன்பாட்டிற்கு வைத்திருந்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அது ஏற்கனவே காம்பவுண்டில் கேட் இருந்தது. அது இத்து போய் விட்டது. அதை மாற்ற பணம் இல்லை. அந்த காம்பவண்ட் சுவரை நீதிமன்ற ஆணையரிடம் காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். காம்பவுண்ட சுவர், இத்து போன கேட் ஆகியவற்றை காண்பித்தேன். துறை அதிகாரிகளை சந்தித்து மனு கொடுத்ததாக சொல்லியிருப்பதில் யார், யாரிடம் கொடுத்தேன் என்றால் ரிசர்வே அலுவலர், ஏ டி அலுவலரிடம், மாவட்ட ஆட்சியர், மதுரை சர்வே துறையில், நகராட்சியில், மனு கொடுத்தேன். அனைத்து அலுவலகத்தில் ஆட்கள் நேரடியாக வந்து அளந்து என்னுடைய இடம் என்று சொல்லிவிட்டார்கள். 8 வருடத்திற்கு முன்பாக வந்து அளந்தார்கள். ஆனால் அதற்கு பிறகு எந்த உத்தரவும் இல்லை. எனது நிருபண வாக்குமூலத்தில் அலுவலர்கள் வந்து நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லிய விவரம் சரியா என்றால் தவறு.

என்னுடைய இடத்தை அலுவலர்கள் அளந்து பார்த்து என்னுடைய இடம் என்று சொன்னதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய இடம் என்று சொல்லும் இடம் என்று சொல்வதில் அது பாதையாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் அந்த பாதையில் பாத்திய உரிமை கேட்க எனக்கு எந்த அறுகதையும் இல்லை என்றால் சரியல்ல. பழைய சர்வேயில் சரியாக இருந்தது. தற்போது ரிசர்வேயில் தவறாக மாற்றிவிட்டார்கள்.

1973 லே ரிசர்வே முடிந்து விட்டதால் அதிலிருந்து 3 வருடத்தில் உரிய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் தற்போது கேட்பது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் கேட்டுள்ள நஷ்ட ஈடு எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல. அதை கேட்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

வழக்கு சொத்தில் உள்ள பாதை பல வருடங்களாக பொதுமக்கள் பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தை நான் படித்து பார்க்கவில்லை.. 2 ம் பிரதிக்கு எதிராக எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல. 2 ம் பிரதிக்கு எதிரான வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது.

<u>3 முதல் 5 பிரதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

(2 ம் பிரதியின் குறுக்கு விசாரணையை ஏற்புரை செய்துள்ளார்.)

எனது பெயரை மட்டும் எனக்கு எழுத தெரியும். இந்த வழக்கில் 3 பிரதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 4,5 பிரதிகளை எனக்கு தெரியுமா என்றால் சத்தீய சீலன், ஜெயகுமார், சேகர் ஆகிய நபர்கள் மீது மட்டுமே வழக்கு தாக்கல் செய்தேன். அதற்கு பின்பு மாவட்ட ஆட்சியரையும் , ஆணையரையும் சேர்த்தேன். 3 முதல் 5 பிரதிகள் தூண்டுதலின் பெயரில் எனது இடதிற்கு தொந்தரவு செய்தார்கள். அவர்கள் தூண்டுதலின் பெயரில் மின்இணைப்பையோ, தண்ணீர் பைப்பையோ, தொந்தரவு செய்யமுடியுமா என்றால் செய்தார்கள். அதனால் தாக்கல் செய்தேன்.

எனது அம்மாவின் உயில் படி எனக்கு வந்த சொத்தின் பரப்பளவு 3 சென்ட் ஆகும். எனது அம்மா எழுதி வைத்த உயிலின் போது பழைய வீடும். பழைய மண் காம்பவுண்ட் சுவரும், கேட்டும் உண்டு என்றால் சரி. சுற்றி காம்பவுண்ட சுவர் ஏற்ப்படுத்தப்பட்ட இடத்தை

விட்டு வெளியே இடத்தை விடுவார்களா என்றால் நான் எனது பயன்பாட்டிற்காக விட்டேன். எனது அம்மாவின் 5 சென்டில் 2 சென்ட் எனது அக்காவிற்கு கொடுத்ததால் அவரை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவேண்டும் என்றால் சரியல்ல. அவர் தேவையில்லை . நியாயமான கட்சிகளை சேர்க்காமல் விட்டதால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

3 முதல் 5 பிரதிகள் இந்த வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்றாலும் அவர்களை சேர்த்த தோசத்தினால் இந்த வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. பல வருடங்களாக பாதையாக பயன்படுத்தி கொண்டிருந்த இடத்தில் நான் கேட்பது சரியல்ல என்றாலும் 1973 ல் ரிசர்வே முடிந்ததால் தற்போது காலவரையறை தோசத்தால் பாதிக்கபட்டுள்ளது என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

3 ம் பிரதி சாலையயை சீர் செய்ய உரிய அரசு அலுவலர்களுடன் வந்த போது நான் அவர்களை அவர்கள் பணியை செய்யவிடாமல் , இடையூறு செய்யததால் என் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றாலும் அதை தடுக்க இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் 3 முதல் 5 பிரதிகளுக்கு எதிரான வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.,

எனது அக்காவிற்கு கொடுத்த 2 சென்டை சொத்தை எனது மனைவி விலைக்கு வாங்கி விட்டார். அதனால் மொத்தம் 5 சென்ட் சொத்தும் என்னிடம் உள்ளது என்றால் சரிதான்.